**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 22.01.2026**
**OS. No. 164/2023**
**வழக்கு சாட்சி DW.1–அலமேலு, க/பெ.மாது**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1)வாதி தனம் என்னுடைய தாயார் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் பழனியம்மாள் மற்றும் முருகன் ஆகும், அதில் என் அண்ணன் முருகன் இறந்துவிட்டார். தாவா சொத்தில் நான் 15 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தை நானும், என் தந்தை பழனியப்பனும் சேர்ந்து காமராஜர் என்பவரிடமிருந்து வாங்கினோம். நாங்கள் காமராஜரிடமிருந்து வாங்கியதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றோம் என்ற விவரமே எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரைய ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை, என் தாயார் வாதியிடம் தான் உள்ளது, ஆனால் சொத்திற்கு வரிகள் அனைத்தும் நான் தான் செலுத்தி வருகிறேன்.

2) என் தாயார் என்ன வேலை செய்கிறார் என்றார் எந்த வேலைக்கும் செல்லவில்லை, வட்டிக்கு பணம் கொடுத்து , வாங்கி வருகிறார். என் தாயாருக்கு எவ்வித ஆதரவும் இல்லாததால், அவருக்கு ஆதரவு வேண்டி கிரைய பத்திரத்தில் என் தாயாரான வாதியின் பெயரை சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். என் தாயாருக்கு மேச்சேரியில் 10 சென்ட் நிலம் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் என் தாயாருக்கு எவ்வித ஆதரவும் இல்லை என்று சொல்லிவிட்டு முன்னுக்கு பின் முரணாக 10 சென்ட் நிலம் உள்ளதாக மாற்றி மாற்றி நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை என் தாயார் தான் முழுக்க முழுக்க தன் சுய சம்பாத்தியத்தால் கிரையம் பெற்றார் என்றும், நான் தாவா சொத்தில் குடியிருந்ததால் என்னுடைய பெயரையும் சேர்க்குமாறு தெரிவித்ததன் பேரில்,கிரைய

ஆவணத்தின் என் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தாயார் தன் சுயசம்பாத்யத்தோடு கிரையம் பெற்றதால் தான் அசல் ஆவணங்கள் அனைத்தும் அவர் வசம் உள்ளது என்றால் சரியல்ல, வரி வகையறாக்கள் நான் தான் செலுத்தி வருகிறேன். தாவா சொத்தின் பைப் லைனில் தண்ணீர் எடுக்க கூட நான் வாதியை விடுவதில்லை என்றும், வரி நான் தான் செலுத்தி வருகிறேன் என்று அவரை தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

3) அமரம் கிராமத்தில் எனக்கு நிலம் உள்ளது என்றால் இருந்தது, அதை விற்றுவிட்டோம். அந்த விற்ற தொகையை நானே வைத்து கொண்டேன் என்றும், வாதிக்கு எந்த பங்கும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, வாங்கி அதை அவர் வட்டிக்கு விட்டுள்ளார். தாவா சொத்தின் வலதுபக்கம் வாதி உள்ளார். இடது பக்கம் நான் உள்ளேன். தாவா சொத்தில் வாதி தண்ணீர் பிடிப்பதில்லை என்றும், வெளியில்தான்பிடித்து கொள்கிறார் என்றால் சரிதான், நான் பிடிக்க சொன்னேன் அவர் தான் பிடிப்பதில்லை. இரண்டு வருடத்திற்கு முன்னர் 12.01.2024 ல் கூட நானும், என் மகனும் சேர்ந்து வாதியை தாவா சொத்தை காலி செய்யும் படி மிரட்டினோம் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக வாதி காவல் நிலையத்திற்கு சென்று புகார் செய்து, மனு ரசீது எண்.21/2024 கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. காவல் துறையினரும் எங்களை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரியவ்லல. நான் சொல்வது தவறு என்றும், அந்த புகார் தொடர்பாக காவல் நிலையத்தில் எங்களை அழைத்து விசாரித்தார்கள் என்றும், என் தாயாருக்கு எந்த தொந்தரவும் நாங்கள் செய்யமாட்டோம் என்று எழுதி கொடுத்துவிட்டு வந்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் அவ்வப்போது வாதியிடம் தாவா சொத்தை பொறுத்து விடுதலை பத்திரம் எழுதி கொடுக்குமாறு தொந்தரவு செய்து வந்ததால் தான் வாதி இந்த வழக்கை யே தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் தாயாருக்கு 70 வயது இருக்கும். 70 வயதில் இருக்கும் என் தாயாருக்கு நாங்கள் மிகுந்த மனஉலைச்சல் கொடுப்பதால் உடல் மற்றும் மனதளவில் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து என் தாயாரின் சுய சம்பாத்திய சொத்து என்பதால் அவரை வெளியேற்ற எங்களுக்கு

எவ்வித உரிமையும் இல்லை என்றும், அதனால் வாதி கோரியவாறு வழக்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.